# நித்திய மகிழ்ச்சி

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# அந்த நகரத்தைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், நண்பர்களே



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

வெளிப்படுத்தின விசேஷம் 22:1
பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்.

வெளிப்படுத்தின விசேஷம் 22:2
நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள்

# ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.

இந்த வேதவசனங்களைக் குறித்து சகோதரன் பிரன்ஹாம் என்ன கூறியிருக்கிறார் என்று இங்கு காண்போம்:

செய்தி: 64-08-23E **கேள்விகளும் பதில்களும்** COD #21

241. அங்கு அமர்ந்திருக்கும் அந்த மகத்தான நகரம் (இப்பொழுது. பாருங்கள்?), அது... நீங்கள் நினைக்கலாம் ‘ஆயிரத்தைந்நூறு மைல் உயரமா?‘ என்று. அப்படித்தான் வேதம் கூறு கிறது. இப்பொழுது, அது செங்குத்தாக இப்படி

ஆயிரத்தைந்நூறு மைல் இருக்காது. பாருங்கள்? எல்லா பாகங்களும் சமமாயுள்ள மற்றொரு பூகோள் அளவு நமக்குள்ளது; அது தான் கூர்நுனிக் கோபுரம். பாருங்கள்?



242. அந்த நகரம் ஒருக்கால் ஏறக்குறைய அறுபது டிகிரியில் துவங்கும். அவ்விதம் அது தொடங்குமானால், அதன் ஆயிரத்

தைந்நூறு மைல்கள், அது எவ்வளவு உயரம் என்றும், அங்கு அடைய எவ்வளவு நேரம் எடுக்கும் என்பதையும் யோசித்துப் பாருங்கள். ஆனால் மலையின் மேல் நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்று உங்களுக்கு தெரியவே தெரியாது. அறுபது டிகிரி சரிவில் ஆயிரத்து ஐந்நூறு மைல் உயரம். நீங்கள் இப்படி இருப்பீர்கள். பாருங்கள்? நகரம் அனைத்தும் இந்த மலையின் மேல் தான் இருக்கும். அது எவ்வளவு உயரமோ அவ்வளவு நீளமும் கூட; அது எவ்வளவு நீளமோ அவ்வளவு அகலமும் கூட – உயரம், ஆழம், உயரம் எல்லாமே சமம்; எல்லா

சுவர்களும் சமம். கூர்நுனிக் கோபுரத்துக்கு நான்கு சுவர்கள் உள்ளன. இந்த நான்கு சுவர்களும்....



243. இப்பொழுது. நகரத்தைச் சுற்றியுள்ள சுவர்கள் 216 அடி உயரம், 144 முழங்கள், அவை ஒவ்வொன்றும் ஒரு கல் – அந்த நகரத்தைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், நண்பர்களே.

ஓ, என்னே! நாம் ஏன் இந்த உஷ்ணமான இடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்?

நாம் ஏன் இந்த காரியங்களைச் செய்கிறோம்?

நாம் ஏன் இவ்விதம் காரோட்டி வருகிறோம்?

நான் ஏன் கஷ்டப்படுகிறோம்?

அது வழியில் ஒவ்வொரு அங்குலமும் தகுதியுள்ளது.



ஓ, நான் வழியின் முடிவை அடையும் போது பாதையில் பட்ட கஷ்டங்கள் ஒன்றுமில்லாதது போல் தோன்றும். அது உண்மை. ஓ, அது எவ்வளவு இனிமையான நேரமாயிருக்கும்! –



244. அங்கு இயேசு சிங்காசனத்தில் வீற்றிருப்பார். ’சிங்காசனத்துக்கு கீழே ஜீவ நதி ஓடி, இந்த நான்கு சுவர்களின் வழியாக பாய்ந்து சிறு ஓடைகளாகப் பிரிந்து, பிறகு நதியாக உருவாகி, நகரத்தின் வழியாக ஓடும். அது இப்படி தெருக்களின் வழியாக பாய்ந்தோடும். நதியின் இருபக்கங்களிலும் ஜீவ விருட்சங்கள் நின்று

கொண்டிருக்கும், அவை முப்பது நாட்களுக்கு ஒரு முறை தங்கள் கனியை மாற்றி வேறொரு கனியைக் கொடுக்கும்,. ஓ, என்ன ஒரு நகரம்!

245. வானத்தையும் பூமியையும் படைத்த சிருஷ்டி கர்த்தராகிய தேவன் இப்பொழுது மகிமையில் இருந்து கொண்டு அந்த நகரத்தை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஆபிரகாம் அந்த நகரம் வருவதற்காக காத்திருந்தான். ஏன்? அவன் ஒரு தீர்க்கதரிசி. அவன்

தீர்க்கதரிசியாயிருந்தான், அவன் ஆவியுடன் தொடர்பு கொண்டிருந்து, ஆவியின் ஒரு பாகமாயிருந்தான். அவனுக்குள் இருந்த ஏதோ ஒன்று அவனிடம், "ஒரு நகரம் உண்டு" என்று உரைத்தது, அவன் அது வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன், 'நான் ஒரு அந்நியன், ஒரு சஞ்சாரி. தேவன் கட்டி உண்டாக்கின நகரத்துக்காக நான் காத்திருக்கிறேன்' என்றான். அந்த நகரம் எங்கோ உள்ளது என்று அவன் அறிந்திருந்தான். ஓ, என்னே! அவன் அது எந்த இடத்தில் வரும் என்று காத்திருந்தானோ, அந்த

பாலஸ்தீனாவில், அங்கு தான் அது எழும்பும் என்று நான் விசுவாசிக்கிறேன். ஏனெனில் அது சீயோன் மலையின் மேல் உள்ளது. அங்குதான் அந்த நகரம் இருக்கும்.



246. அது எங்கு பரம்புகிறது என்று பாருங்கள் – சமுத்திரத்துக்குள், ஒரு

சமுத்திரத்திலிருந்து மறு சமுத்திரம் வரைக்கும். கர்த்தருடைய பர்வதத்தின் மேல் ஆயிரத்தைந்நூறு மைல் நகரம் அமர்ந்திருப்பதை எண்ணிப் பாருங்கள். ஓ, அது அற்புதமாயிருக்கும்!

247. அங்கு சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும். சிங்கம் மாட்டைப் போல் வைக்கோலைத் தின்னும். கரடி சாந்தமாயிருக்கும், ஓனாய் அடங்கியிருக்கும். அது எப்படிப்பட்ட நேரமாயிருக்கும்! எதுவுமே தீங்கு செய்து அழிக்காது; எல்லாமே சமாதானத்திலும் அன்பிலும் இருக்கும். அங்கு

வயோதிபம் இருக்காது; அங்கு வியாதியோ மரணமோ இராது.



★★★★★

**குறிப்பு:**

இந்தச் சிறு புத்தகத்திலுள்ள எல்லா படங்களும் இணைதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

தேவனுடைய வார்த்தைகளும், செய்தியும் முற்றிலும் சத்தியமாக இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். **ஆனால் பரலோகத்திலுள்ள காட்சிகளை யாராலும் அப்படியே வரையவே முடியாது**. ஏனென்றால் அதை கண்கள் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை என்று வேதாகமம் கூறுகிறது. எனவே மனுஷனுடைய இருதயத்தில் தோன்றாமல் மனிதனால் எவ்வாறு அதைத் தத்ரூபமாக வரைய முடியும்? **ஆனாலும் சில ஓவியர்கள் வேதவசனங்களை ஆதாரமாகக் கொண்டு இந்தப் படங்களை வரைந்திருக்கிறார்கள். அவர்களுக்காக தேவனுக்கு நன்றி**.

ஏனென்றால், இவைகளைக் காணும்போது, நாம் இக்கொஞ்ச கால உலக வாழ்க்கை முடிந்து நித்திய நித்திய காலமாக வசிக்கப் போகும் அந்த மகத்தான ஒளிமயநாட்டைக் குறித்து ஓரளவு நம்மால்

கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஆனாலும் அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது ஒன்றுமே இல்லை. அதை எந்த மனிதனாலும் வரைய முடியாது. ஒருநாள் நாம் அங்கு போகும்போது தான் அதை அனுபவித்து மகிழ்வோம். இந்த படங்களை வரைந்த ஓவியர்களுக்கு நன்றி. **மேலும் இந்தப் படங்களில் கலர் உடைகளை அணிந்திருப்பதாக வரையப்பட்டுள்ளது. ஆனால் அங்கே வெண்ணாடை அணிந்திருப்பார்களோ என்று நினைக்கிறேன்.**

# இனிமையான பரமவீடு



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 57-10-06 எபிரெயர் நிருபத்தின் பேரிலான COD #7

858. யோவான், “பின்பு, நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நரகத்தைத் தேவனிடத்திலின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக் கண்டேன்: அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது”

என்றான். அங்குதான் உங்கள் காரியமே உள்ளது.



859. அவன், "மனைவி.. ஆட்டுக்குட்டியும் மணவாட்டியும் அங்கே என்றென்றுமாயிருப்பர்" என்றான். புதிய பூமியோ

கோடிக்கணக்கான மைல்கள் சதுரமாயிருக்கும்.



ஓ, என்னே, நகரம், வேதாகம அளவுகளின்படி நகரம் பதினைந்தாயிரம் மைல்கள் சதுரமாயிருக்கும்.







அது பதினைந்தாயிரம் மைல்கள் நீளமும், பதினைந்தாயிரம் மைல்கள் அகலமும், பதினைந்தாயிரம் மைல்கள் உயரமுமாயிருக்கும். அதுவே அந்த நகரத்தைக் குறித்து வேதம் அளிக்கிற சரியான விவரமாயிருக்கிறது. அங்கே சமுத்திரம் இல்லாதிருப்பதில்

வியப்பொன்றுமில்லையே, அதற்கு அங்கே இடமே இல்லாதிருந்தது.



860. ஓ, அது அப்பேர்ப்பட்ட அழகாயிருக்கும்! அங்கே, அங்கே தேவனுடைய
சிங்காசனத்தண்டையிலே ஒரு ஊற்று உண்டு, அது சிங்காசனத்திற்கு முன்பாக பாய்ந்தோடுகிறது.



ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதியின்... இருகரைகளிலும் ஜீவ விருட்சங்களிருந்தன. பன்னிரண்டுவிதமான கனிகளைத் தரும் இந்த விருட்சமானது

ஒவ்வொரு மாதமும் அதனுடைய கனிகளைக் கொடுக்கும்.



861. அங்கே இருப்பத்து நான்கு மூப்பர்கள் இருக்கின்றனர்.

அங்கே மணவாட்டியும் இருக்கிறாள்.

அங்கே நாற்பத்தி நாலாயிரம் ஆலய அண்ணகர்களும் இருக்கின்றனர்.



ஓ, சகோதரனே, நாம் எங்கோ சென்று கொண்டிருக்கிறோம். காரியங்களோ நமக்காக முன்னதாகவே வைக்கப்பட்டுள்ளன. நான்கு. இருபத்தி நான்கு மூப்பர்கள் உள்ளனர்.



இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் அண்ணகர்கள் உள்ளனர். மணவாட்டியோ கிறிஸ்துவோடு அமர்ந்திருக்கிறாள். என்னே, நீங்கள் பேசி... என்னுடைய பரமவீடு, இனிமையான பரமவீடு! ஆமென்.





862. அங்கே போகும் சிலாக்கியம் எனக்கு உண்டு என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன், அங்கே போகும் சிலாக்கியம் உங்களுக்கும் உண்டு. அப்படியிருக்க நீங்கள் ஏன் இந்த அந்தகாரத்தில் நடக்கவும், எந்த வெளிச்சத்தையும் காணாமல்

மரித்து, குழப்பத்திற்குள்ளாக சென்று ஒன்றுமில்லாமல் போக மனதாயிருக்கிறீர்கள்?



ஏனென்றால் வெளிச்சம் தன்னுடைய உயரிய அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும்போது, அங்கே அந்தகாரத்திற்கு இடமே இல்லை.



வெளிச்சமானது வரும்போது, அந்தகாரம் எங்கே என்று போய் கண்டறியுங்கள். எல்லாக் காரியங்களும் தேவனிடத்தில்

திருப்பப்படுகின்றபோதும் அப்படித்தான் உள்ளது. இருளுக்கு ஒரு துவக்கம் உண்டாயிருந்தது, இருளுக்கு ஒரு முடிவும் உண்டு.



வெளிச்சத்திற்கோ ஒருபோதும் ஒரு துவக்கமே இல்லாதிருந்தது, அதற்கு ஒருபோதும் ஒரு முடிவும் கிடையாது. தேவனுக்கு ஒருபோதும்

ஒரு துவக்கமும் இல்லாதிருந்தது, ஒருபோதும் ஒரு முடிவும் கிடையாது.



ஆகையால் என்றோ ஒரு நாள் முழு ஒழுக்கக்கேடான உலகமானது அதனுடைய எல்லா பாவத்தோடும், அதனுடைய அழகோடும், அதனுடைய எல்லா அற்புதமான காரியங்கள் மற்றும்

உணர்ச்சிகளோடும், அதனுடைய எல்லா கவர்ச்சி என்ற அழைக்கப்படுகிற ஒவ்வொரு காரியத்தோடும் ஒன்றுமில்லாமல் மங்கிப் போய்விடும், அது இனி ஒரு போதும் இல்லாமலே போய்விடும்.

அது இனி ஒருபோதும் இராது, அதைக் குறித்த சிந்தனையும் ஒருபோதும் இல்லாமற்போய்விடுமே!

"அது இனி ஒருபோதும் நினைவு கூறப்படுவதற்குள்ளாகவும் கூட தோன்றாது" என்றே கூறப்பட்டுள்ளது.


Marcus Washburn

863. ஆனால் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் எப்பொழுதும் அவரோடிருப்பர்.



நாம் அவருடைய சொந்த மகிமையான சரீரத்தைப் போன்ற ஒரு சரீரத்தை உடையவர்களாயிருப்போம்; அவரோடு ஜீவிப்போம், அவரோடு புசிப்போம், அவரோடு அமருவோம், அவரோடு என்றென்றுமாய், யுகயுகமாக வாசம் பண்ணுவோம்; நித்திய காலங்களோ உலகத்தோடு முடிவேயில்லாமல் உருண்டோடும்.





864. இன்றிரவு உங்களுக்கு ஒரு தருணம் உண்டு.



அந்த இடத்தைச் சந்திக்க நீங்கள் ஆயத்தப்படவில்லையென்றால், நீங்கள் எவ்வளவுதான் சபைக்குச் சென்றாலும், நீங்கள் எவ்வளவுதான் ஒரு நல்ல அங்கத்தினராயிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல, நீங்கள் நடக்கிற அந்த அந்தகாரத்தில் கிறிஸ்து உங்களுக்கு புதிய ஜீவனை அளிக்கும்வரை நீங்கள் இழக்கப்பட்டவராகவே இருக்கிறீர்கள். நீங்கள் பக்தியுள்ளவர்களாயிருக்கலாம். பக்தி, கவனியுங்கள், நண்பர்களே, சமயம் அறிவுப் பூர்வமானதாயுள்ளது. புரிகிறதா?

காயீனின் பிள்ளைகள் எல்லோருமே எப்பொழுதுமே ஒரு மார்க்கத்தை உடையவர்களாயிருந்து வந்தனர். இயேசு வந்தபோது அந்த யூதர்கள் ஒரு மார்க்கத்தை உடையவர்களாயிருந்தனர், ஆனால் அவர்கள் இரட்சிப்பைப் புறக்கணித்தனர்.



865. நீங்கள் இன்றிரவு மிகுந்த பக்தியுள்ளவர்களாயிருக்கலாம்.

நீங்கள் பிரஸ்பிடேரியனாய், மெத்தோடிஸ்டாய், பெந்தேகோஸ்தேக்காரராய், நசரேயனாய், யாத்திரீகப் பரிசுத்தராயிருக்கலாம்.

நீங்கள் நேர்மையான மார்க்கத்தை உடையவராயிருப்பதால், உங்களுடைய சபைக்குச் சென்று, சாட்சி பகரலாம்.



நீங்கள் பாடலாம், ஆரவாரமிடலாம், கர்த்தரை ஸ்தோத்தரிக்கலாம், நீங்கள் சபைக்கு உங்களுடைய தசமபாகங்களைக் கொண்டு வரலாம், நீங்கள் உங்களுடைய அண்டைவீட்டாரை சரியாக நடத்தலாம். அதற்கு உங்களுடைய நித்திய பயண இலக்கோடு எந்த ஒரு சம்மந்தமுமில்லை. காயீன் அந்த ஒவ்வொரு சிறு

காரியத்தையும் செய்தான். முற்றிலுமாக.







866. வேதம், "கோதுமையும் களைகளும் ஒன்று சேர்ந்து வளர்ந்தன" என்று கூறியுள்ளது.

அந்த கோதுமை மழைக்காக கடும் வேட்கையுற்றுக் கொண்டிருந்தபோது, களைகளும் கூட வேட்கையுற்றுக் கொண்டிருந்தன.

மழை வந்தபோது கோதுமையைப் போலவே களைகளும் மழையைப் பெற்றுக்கொள்ள மகிழ்ச்சியடைந்தன.

"ஆனால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்."



இப்பொழுது நீங்கள் உங்களுடைய கனிகளை சோசித்துப் பார்க்கையில், நாம் ஜெபம் செய்வோமாக.

**குறிப்பு:**

இந்தச் சிறு புத்தகத்திலுள்ள எல்லா படங்களும் இணைதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

தேவனுடைய வார்த்தைகளும், செய்தியும் முற்றிலும் சத்தியமாக இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். **ஆனால் பரலோகத்திலுள்ள காட்சிகளை யாராலும் அப்படியே வரையவே முடியாது**. ஏனென்றால் அதை கண்கள் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை என்று வேதாகமம் கூறுகிறது. எனவே மனுஷனுடைய இருதயத்தில் தோன்றாமல் மனிதனால் எவ்வாறு அதைத் தத்ரூபமாக வரைய முடியும்? **ஆனாலும் சில ஓவியர்கள் வேதவசனங்களை ஆதாரமாகக் கொண்டு இந்தப் படங்களை வரைந்திருக்கிறார்கள். அவர்களுக்காக தேவனுக்கு நன்றி**.

ஏனென்றால், இவைகளைக் காணும்போது, நாம் இக்கொஞ்ச கால உலக வாழ்க்கை முடிந்து நித்திய நித்திய காலமாக வசிக்கப் போகும் அந்த மகத்தான ஒளிமயநாட்டைக் குறித்து ஓரளவு நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஆனாலும் அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது ஒன்றுமே இல்லை. அதை எந்த மனிதனாலும் வரைய முடியாது. ஒருநாள் நாம் அங்கு போகும்போது தான் அதை அனுபவித்து மகிழ்வோம். இந்த படங்களை வரைந்த ஓவியர்களுக்கு நன்றி. **மேலும் இந்தப் படங்களில் கலர் உடைகளை அணிந்திருப்பதாக வரையப்பட்டுள்ளது. ஆனால் அங்கே வெண்ணாடை அணிந்திருப்பார்களோ என்று நினைக்கிறேன்.**

# மகிமையான ஆயிரவருட அரசாட்சி

ஓ, அது மிகவும் அருமையான, அற்புதமான தருணமாயிருக்கும். நாம் அந்த நாளுக்காக காத்திருக்கிறோம்; அந்த நாள் வர தேவன் துரிதப்படுத்துவாராக.



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

செய்தி: **கேள்விகளும் பதில்களும்,** (COD 2:20), ஆகஸ்ட் 23, 1964 மாலை, பத்தி எண் 233-248

சபை, வெதுவெதுப்பான சபை, தெரிந்து கொள்ளப்பட்ட மணவாட்டிக்கு புறம்பேயுள்ள எதுவுமே உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து செல்லும். அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் எழுந்திருக்க மாட்டார்கள். "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை" (வெளி. 19:5). முன்குறிக்கப்பட்ட, தெரிந்து கொள்ளப்பட்ட, தேவனால் சொந்தமாக தெரிந்து கொள்ளப்பட்ட மணவாட்டி மட்டுமே. "அது யார், சகோ.பிரான்ஹாமே?" எனக்குத் தெரியாது. அது யாரென்று என்னால் கூற இயலாது, ஆனால் அது இருக்கப் போகிற தென்று எனக்குத் தெரியும், ஏனெனில் தேவன் அவ்வாறு உரைத்துள்ளார். பாருங்கள்? அவர் கள் தான் உபத்திரவ காலத்துக்கு தப்பி மேலே

எடுத்துக்கொள்ளப்படுவார்கள். மற்றவர்களோ உபத்திரவ காலத்தின் வழியாக இங்கு கீழே கடந்து செல்வார்கள். எல்லாமே ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்பு கொல்லப்படும். அதன் பிறகு நீதிமான்கள் ஆயிரம் வருட அரசாட்சி யின் போது வந்து ஆயிரம் ஆண்டுகள் வாழ்வார்கள்.

இந்த ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த மகத்தான வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வருகிறது. அப்பொழுது மரித் தோர், நல்லோர் தீயோர் இருவரும், உயிரோ டெழுவார்கள். புத்தகங்கள் திறக்கப்படுகின்றன. ஜீவபுஸ்தகமும் திறக்கப்படுகிறது; அப்பொழுது பரிசுத்தவான்கள் – மனைவியும் கணவனும் – உட்கார்ந்து கொண்டு நியாயந்தீர்ப்பார்கள். அப்பொழுது "அவர் இருப்புக் கோலால் சகல ஜாதிகளையும் நியாயந்தீர்ப்பார்" என்னும் வசனம் நிறைவேறுகிறது. எல்லா தேசங்களும் அங்கு அவருக்கு முன்பாக நிற்கும். அவர் இருப்புக் கோலால் அவர்களை நியாயந் தீர்ப்பார்.

அவர் வெள்ளாடுகளிலிருந்து செம்மறியாடு களைப் பிரித்து, வெள்ளாடுகளை நோக்கி, "அகன்று போங்கள்" என்றும், செம்மறியாடு களிடம், "வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே" என்பார்.

பூமியின் பரப்பு முழுவதிலும் பரிசுத்த வான்களின் 'கேம்ப் கூட்டம்' (camp meeting) ஒன்று நடைபெறும். சாத்தான் தன் சிறையி லிருந்து விடுவிக்கப்பட்டு, பரிசுத்தவான்களோடு யுத்தம் பண்ணச் செல்கிறான் – அவன் தொடக்கத்தில் மகிமையில் செய்த அதே விதமாக. அப்பொழுது தேவன் வானத்தி லிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷிப்பார். முழு பூமியும் அகற்றப்படுகிறது... அது எரிந்து அழிக்கப்படுகிறது. அப்பொழுது சமுத்திரம் இனி இல்லாமல் போகும், தண்ணீர் இனி இல்லாமல் போகும், ஒன்றுமே பூமியின் மேல் விடப்பட்டிருக்காது. எரிமலைகள் வெடித்து சிதறித் தெளித்து, எல்லாமே...

"பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின;

சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான் பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது" (வெளி. 21:1-2). அது உங்களுக்கு ஞாபகமுள்ளதா? இந்த மணவாட்டியில்... "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது" (வெளி. 21:3). தேவன் அவர்களிடத்திலே கூர்நுனிக் கோபுர வடிவிலுள்ள ஆயிரத்தைந்நூறு சதுர மைல் பரப்புள்ள அந்த நகரத்திலே வாசமாயிருப்பார். நகரத்தின் உச்சியில் வெளிச்சம் இருக்கும். ஆமென்.

ஓ, சீயோன் மலையின் மேலுள்ள அந்நகரம்

அந்நியனாயிருந்தும், அதை இன்னும் நேசிக்கிறேன்

நான் மலையின் மேலுள்ள அந்நகரத்தை அடையும்போது

காலாகாலங்களில் உம்மை சந்திப்பேன்.

சீயோன் மலையின் உச்சியில் ஆட்டுக் குட்டியானவர் வீற்றிருப்பார். நகரத்துக்கு வெளிச்சம் தேவையில்லை, ஆட்டுக்குட்டியான வரே அதற்கு விளக்கு. ஆட்டுக்குட்டியான வருக்கு மேல் பிதா, அந்த 'லோகாஸ்' இருப்பார். தேவன், அந்த மகத்தான வெளிச்சம், நித்திய வெளிச்சம், சிங்காசனத் துக்கு மேலே பிரகாசிப்பார். இயேசு அவரு டைய பிதாவின் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாட்டார், தம்முடைய சிங்காசனத்தில் வீற்றிருப் பார். பிதா குமாரனின் மேல் வட்டமிட்டுக் கொண்டிருப்பார், பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பார்கள். "அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்" (ஏசா. 65:24). அது உண்மை.

இயேசு ஒரு பரிபூரண, பரிபூரண காலத்தை, பரிபூரணமான ஜீவனுள்ள தேவ னுக்கு ஒப்புவிப்பார் – அவர் மீட்டுக்கொண் டதை பிதாவினிடம் ஒப்புவிப்பார். அது சரியா? ஆவியாயிருக்கிற பிதாவாகிய தேவனிடம் ஒப்புவிப்பார், மனிதனிடம் அல்ல, ஆவியா

யிருக்கிற பிதாவினிடம். நன்மையானவை களின் எல்லா சுபாவமும் ஒன்றுதிரண்டுள்ளது தான் தேவன். நன்மையானவைகளில்... நன்மை தாறுமாறாக்கப்படுதலே பொல்லாங்கு; அது சாத்தானின் ராஜ்யம். நன்மையான எல்லாமே தேவனுக்குச் சொந்தமானது. பொல் லாங்கு அனைத்தும் சாத்தானுக்கு சொந்த மானது.

அதன்பிறகு தேவன் இயேசு கிறிஸ்து என்று அழைக்கப்பட்ட ஒரு மனிதனுக்குள் திடமான பொருளானார். அதுதான் அவருடைய குமாரன். இந்த குமாரன், மற்ற குமாரர்களைக் கொண்டுவரும் பொருட்டு தம்முடைய ஜீவனை ஈந்தார் – தேவன் காணக்கூடியவராய் அவர்கள் எல்லோரிலும் கிரியை செய்யும் பொருட்டு, "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" (யோவான் 14:20).

ஓ, சகோதரனே, அது ஒரு உண்மை யான நாளாயிருக்கும். நீங்கள் செய்தியைக் கேட்பதற்காக பர்மிங்ஹாமிலிருந்து காரோட்டிக்

கொண்டு வர வேண்டிய அவசியமிராது; அப்பொழுது செய்தி நம்முடனே கூட இருக்கும். இல்லையா? ஓ, அது மிகவும் அருமையான, அற்புதமான தருணமாயிருக்கும். நாம் அந்த நாளுக்காக காத்திருக்கிறோம்; அந்த நாள் வர தேவன் துரிதப்படுத்துவாராக.

அங்கு அமர்ந்திருக்கும் அந்த மகத்தான நகரம் (இப்பொழுது, பாருங்கள்?). அது... நீங்கள் நினைக்கலாம் "ஆயிரத்தைந்நூறு மைல் உயரமா?" என்று. அப்படித்தான் வேதம் கூறுகிறது. இப்பொழுது, அது செங்குத்தாக இப்படி ஆயிரத்தைந்நூறு மைல் இருக்காது. பாருங்கள்? எல்லா பாகங்களும் சமமாயுள்ள மற்றொரு பூகோள அளவு நமக்குள்ளது; அது தான் கூர்நுனிக் கோபுரம். பாருங்கள்?

அந்த நகரம் ஒருக்கால் ஏறக்குறைய அறுபது டிகிரியில் துவங்கும், அவ்விதம் அது தொடங்குமானால், அதன் ஆயிரத்தைந்நூறு மைல்கள், அது எவ்வளவு உயரம் என்றும், அங்கு அடைய எவ்வளவு நேரம் எடுக்கும்

என்பதையும் யோசித்துப் பாருங்கள். ஆனால் மலையின் மேல் நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்று உங்களுக்கு தெரியவே தெரியாது. அறுபது டிகிரி சரிவில் ஆயிரத்து ஐந்நூறு மைல் உயரம், நீங்கள் இப்படி இருப்பீர்கள். பாருங்கள்? நகரம் அனைத்தும் இந்த மலையின் மேல் தான் இருக்கும். அது எவ்வளவு உயரமோ அவ்வளவு நீளமும் கூட; அது எவ்வளவு நீளமோ அவ்வளவு அகலமும் கூட – உயரம், ஆழம், அகலம் எல்லாமே சமம்; எல்லா சுவர்களும் சமம். கூர்நுனிக் கோபுரத்திற்கு நான்கு சுவர்கள் உள்ளன. இந்த நான்கு சுவர்களும்...

இப்பொழுது, நகரத்தைச் சுற்றியுள்ள சுவர்கள் 216 அடி உயரம், 144 முழங்கள், அவை ஒவ்வொன்றும் ஒரு கல் – அந்த நகரத்தைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், நண்பர்களே. ஓ, என்னே! நாம் ஏன் இந்த உஷ்ணமான இடத்தில் உட்கார்ந்து கொண் டிருக்கிறோம்? நாம் ஏன் இவ்விதம் காரோட்டி வருகிறோம்? நாம் ஏன் கஷ்டப்படுகிறோம்?

அது வழியில் ஒவ்வொரு அங்குலமும் தகுதியுள்ளது.

ஓ, நான் வழியின் முடிவை அடையும் போது

பாதையில் பட்ட கஷ்டங்கள் ஒன்றுமில் லாதது போல் தோன்றும்.

அது உண்மை. ஓ, அது எவ்வளவு இனிமையான நேரமாயிருக்கும்!

அங்கு இயேசு சிங்காசனத்தில் வீற்றிருப்பார். சிங்காசனத்துக்குக் கீழே ஜீவ நதி ஓடி, இந்த நான்கு சுவர்களின் வழியாக பாய்ந்து சிறு ஓடைகளாகப் பிரிந்து, பிறகு நதியாக உருவாகி, நகரத்தின் வழியாக ஓடும். அது இப்படி தெருக்களின் வழியாக பாய்ந்தோடும். நதியின் இரு பக்கங்களிலும் ஜீவ விருட்சங்கள் நின்று கொண்டிருக்கும், அவை முப்பது நாட்களுக்கு ஒருமுறை தங்கள் கனியை மாற்றி வேறொரு கனியைக் கொடுக்கும். ஓ, என்ன ஒரு நகரம்!

வானத்தையும் பூமியையும் படைத்த சிருஷ்டி கர்த்தராகிய தேவன் இப்பொழுது

மகிமையில் இருந்து கொண்டு அந்த நகரத்தை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக் கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆபிரகாம் அந்த நகரம் வருவதற்காக காத்திருந்தான்... ஏன்? அவன் ஒரு தீர்க்கத் தரிசி. அவன் தீர்க்கத்தரிசியாயிருந்தான், அவன் ஆவியுடன் தொடர்பு கொண்டிருந்து, ஆவியின் ஒரு பாகமாயிருந்தான். அவனுக் குள் இருந்த ஏதோ ஒன்று அவனிடம், “ஒரு நகரம் உண்டு” என்று உரைத்தது, அவன் அது வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந் தான். அவன், “நான் ஒரு அந்நியன், ஒரு சஞ்சாரி. தேவன் கட்டி உண்டாக்கின நகரத்துக் காக நான் காத்திருக்கிறேன்” என்றான். அந்த நகரம் எங்கோ உள்ளது என்று அவன் அறிந்திருந்தான். ஓ, என்னே! அவன் அது எந்த இடத்தில் வரும் என்று காத்திருந்தானோ, அந்த பாலஸ்தீனாவில், அங்கு தான் அது எழும்பும் என்று நான் விசுவாசிக்கிறேன். ஏனெனில் அது சீயோன் மலையின் மேல் உள்ளது. அங்கு தான் அந்த நகரம் இருக்கும்.

அது எங்கு பரம்புகிறது என்று பாருங்கள் – சமுத்திரத்துக்குள், ஒரு சமுத்திரத் திலிருந்து மறு சமுத்திரம் வரைக்கும். கர்த்தரு டைய பர்வதத்தின் மேல் ஆயிரத்தைந்நூறு மைல் நகரம் அமர்ந்திருப்பதை எண்ணிப் பாருங்கள். ஓ, அது அற்புதமாயிருக்கும்!

அங்கு சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்துப் படுத்துக் கொள்ளும். சிங்கம் மாட்டைப் போல் வைக்கோலைத் தின்னும். கரடி சாந்தமாயிருக்கும், ஓனாய் அடங்கி யிருக்கும். அது எப்படிப்பட்ட நேரமாயிருக்கும்! எதுவுமே தீங்கு செய்து அழிக்காது; எல்லாமே சமாதானத்திலும் அன்பிலும் இருக்கும். அங்கு வயோதிபம் இருக்காது; அங்கு வியாதியோ மரணமோ இராது.

ஜனங்களே, இது சாண்டா க்ளாஸ் கதை அல்ல, ஏதோ ஒரு கட்டுக் கதை அல்ல, இது வார்த்தையில் எழுதப்பட்டுள்ளது. வார்த்தை ஒருபோதும் தவறினதில்லை, அந்த வாக்குத்தத்தத்தைக் குறித்து எண்ணிப் பார்க்கும் போது... இது வேதாகம நாட்களில் அல்ல, இந்நாளில், தேவன் நியமித்துள்ள

இந்நாளில் நிறைவேறும். அவருடைய வார்த்தையில் ஒரு சிறு அணுவும் கூட ஒருபோதும் தவறினதில்லை. ஓ, அந்த நகரத்தை நோக்கி நான் சென்று கொண்டிருக்கிறேன். அதை நான் நேசிக்கிறேன், நீங்களும் நேசிக்கிறீர்கள் அல்லவா?

★★★★★

# ஒருக்கால் அவர்கள் ஒரு கோடி வயதானவர்களாயிருக்கலாம். ஆனாலும் அவர்கள் என்றும் போல் யௌவனமாகக் காணப்படுவார்கள்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# ஏசாயா 65: 24, 25

அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப்போல வைக்கோலைத் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.



## ஏசாயா 11:6-9

அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்.

பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப்படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்.

பால் குடிக்குங்குழந்தை விரியன்பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்,

என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

செய்தி: **புத்திரசுவிகாரம் - பாகம் - 2**
Jeffersonville, Indiana, USA
60-05-18

44. இப்பொழுது நாம் எங்கு வந்திருக்கிறோம்? வரப்போகும் அந்த மகத்தான காலத்தில் நாம் மகிமையின் சரீரத்தை தரித்துக் கொள்வோம். வானத்துக்குறிய இந்த சரீரம் அப்பொழுது மகிமையின் சரீரமாக மாறும். நான் கூறுவது உங்களுக்குப் புறிகின்றதா? அப்பொழுது நான் நடந்து சென்று, "சகோ. நெவில்" என்று அவருடன் பேசுவேன்.

ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். நான், "சகோ. ஹ்யூம்ஸ், இன்று காலை தந்தையிடம் செல்லலாம்" என்பேன். அந்த தந்தை யார் தெரியுமா? அவர்தான் தேவன். அவரை நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம். அவர் இரட்சகர், சுகமளிப்பவர்.

பாவம் சிருஷ்டிக்கப்பட்டது என்பது கிடையவே கிடையாது. கேட்பதற்கு அது

அவ்வளவு நன்றாக இல்லை. இல்லையா? பாவம் சிருஷ்டிக்கப்படவில்லை. இல்லை, ஐயா பாவம் தாறுமாறாக்கப்பட்ட ஒன்றாகும். சிருஷ்டி கர்த்தர் ஒருவரே. அவர் தான் தேவன். பாவம் என்பது நீதி தாறுமாறாக்கப்படுதல் (Perversion). விபச்சாரம் என்பது என்ன? நீதியான ஒரு செயல் தாறுமாறாக்கப்படுதல். பொய் என்பது என்ன? உண்மை தவறாக உரைக்கப்படுதல். நிச்சயமாக. சபித்தல் என்பது என்ன? தேவனுடைய ஆசிர்வாதங்கள் சபித்தலாக மாற்றப்படுதல். எனவே ஆசிர்வாதங்களுக்குப் பதிலாக அவர்கள் சாபத்தைப் பெற்றனர்.

பாவம் என்பது சிருஷ்டிப்பல்ல. அது தாறுமாறாக்கப்பட்ட ஒன்று. சாத்தானால் பாவத்தை சிருஷ்டிக்க முடியவில்லை. எனவே தேவன் சிருஷ்டித்ததை அவன் தாறுமாறாக்கினான். அது முற்றிலும் உண்மை. மரணம் என்பது ஜீவன் தாறுமாறாக்கப்படுதல்.

45.
இதை
கவனியுங்கள்,
இதை
கவனியுங்கள்.
நான் நடந்து
சென்று,
“சகோ.
ஹ்யூம்ஸ்,
நீங்களும்
நானும் சகோ.
பீலரும்
இன்னும் சில
சகோதரர்களும்
நமது
தந்தையிடம்
போகலாம்”
என்பேன்.
நான் மேலும்,
“நாம் சுற்றுப்
பயணம்
செய்யலாம்.



நீங்கள் பூமியிலிருந்த போது மலைகளை விரும்பினீர்கள் அல்லவா?"



"ஆம், நிச்சயமாக."

"அப்படியானால் கோடிக்கணக்கான மைல்கள் தொலைவில் அந்த புதிய உலகில், சில உள்ளன. அங்கு சென்று உலாவி வாருங்கள்."

"சூரியன் உதிப்பதற்காக ஒவ்வொரு நாளும் அதை நான் உதிக்கச் செய்ய வேண்டும்." "நான் மறு உத்தரவு கொடுப்பேன். அவர்கள் பேசும் போதே நான் கேட்பேன்" ஏசாயா: 66. அது உண்மை.

46. உங்களுக்குத் தெரியுமா, அங்கு நான் நடந்து கொண்டிருப்பேன், நாமெல்லாரும் அங்கு ஐந்நூறு ஆண்டு காலமாக நடந்து கொண்டிருப்போம். ஆனால் கோடிக்கணக்கான ஆண்டுகளுடன் அதை

ஒப்பிடும் போது, அது ஒரு சிறு பயணமாகவே அமைந்திருக்கும். நான் கூறுவது பைத்தியமாகத் தென்படலாம். ஆனால் அதுவே உண்மை. பாருங்கள், அது உண்மை. ஏனெனில் காலவரம்பு என்பது அங்கு கிடையாது. அது நித்தியம்.

அங்கு நான் நடந்து சென்று கொண்டிருக்கும் போது யாரை சந்திக்கிறேன் தெரியுமா? சகோதரி ஜார்ஜி ப்ரூஸ் அல்லவா அது? சகோதரி ஜார்ஜி, உங்களைக் கண்டு அதிக காலமாகிவிட்டது. நீங்கள் எப்பொழுதும் போலவே காணப்படுகின்றீர்கள்.

ஒருக்கால் அவர்கள் ஒரு கோடி வயதானவர்களாயிருக்கலாம். ஆனாலும் அவர்கள் என்றும் போல் யொவனமாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் ஏதாவதொன்றின் முதுகை தடவிக் கொண்டிருப்பார்கள். அது என்னவென்று பார்த்தால், சிறுத்தையாக அல்லது சிங்கமாக இருக்கும்.



நான், “சிறுத்தையே, இன்று காலை எப்படியிருக்கிறாய்?” என்று கேட்க, அது, “மியாவ்” என்று பூனைக் குட்டியைப் போல் பதிலுரைக்கும்.

அந்த சகோதரி, “ஓ, நான் பெரிய பூக்கள் வளர்ந்துள்ள பூங்காவில் சில சகோதரர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். நாங்கள் அந்த பூக்களைப் பார்த்துக் கொண்டே ஐந்நூறு ஆண்டுகள் அங்கேயே தங்கிவிட்டோம்” என்பார்கள். கேட்பதற்கு அது பைத்தியமாகத் தோன்றும், ஆனால் அது உண்மை. அது முற்றிலும் உண்மை. தேவன் அவ்வாறே அதை நிர்ணயித்துள்ளார்.

47. சகோதரி ஜார்ஜியா, கர்த்தர் உங்கள் இருதயத்தை ஆசிர்வதிப்பாராக. அங்கு எவ்வித தீங்கும் நேரிடாது.

சாயங்கால நேரத்தில் நாம் மலையின் உச்சியில் சென்று, “ஓ, பிதாவாகிய தேவனே, ஒரு சமயம் நான் பாவத்தில் விழுந்து கிடந்தேன். நான் பாவம் என்னும் உளையான சேற்றில் மூழ்கியிருந்தேன். பிதாவாகிய தேவனே, என்னை நீர் இரட்சித்தீர்” என்போம்.



## குறிப்பு:

இந்தச் சிறு புத்தகத்திலுள்ள எல்லா படங்களும் இணைதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

தேவனுடைய வார்த்தைகளும், செய்தியும் முற்றிலும் சத்தியமாக இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். ஆனால் பரலோகத்திலுள்ள காட்சிகளை யாராலும் அப்படியே வரையவே முடியாது. ஏனென்றால் அதை கண்கள் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை என்று வேதாகமம் கூறுகிறது. எனவே மனுஷனுடைய இருதயத்தில் தோன்றாமல் மனிதனால் எவ்வாறு அதைத் தத்ரூபமாக வரைய முடியும்? ஆனாலும் சில ஓவியர்கள் வேதவசனங்களை ஆதாரமாகக் கொண்டு இந்தப் படங்களை வரைந்திருக்கிறார்கள். அவர்களுக்காக தேவனுக்கு நன்றி.

ஏனென்றால், இவைகளைக் காணும்போது, நாம் இக்கொஞ்ச கால உலக வாழ்க்கை முடிந்து நித்திய நித்திய காலமாக வசிக்கப் போகும் அந்த மகத்தான ஒளிமயநாட்டைக் குறித்து ஓரளவு நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஆனாலும் அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது ஒன்றுமே இல்லை. அதை எந்த மனிதனாலும் வரைய முடியாது. ஒருநாள் நாம் அங்கு போகும்போது தான் அதை அனுபவித்து மகிழ்வோம். இந்த படங்களை வரைந்த ஓவியர்களுக்கு நன்றி. மேலும் இந்தப் படங்களில் கலர் உடைகளை அணிந்திருப்பதாக வரையப்பட்டுள்ளது. ஆனால் அங்கே வெண்ணாடை அணிந்திருப்பார்களோ என்று நினைக்கிறேன்.

# நான் இயேசுவைக் காண விரும்புகிறேன். நீங்கள் விரும்பவில்லையா?

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

நான் ஒரு கணப்பை மூட்ட முயன்றுகொண்டிருந்தேன். அப்பொழுது நான் வானொலியைத் திருப்ப நேர்ந்தது, அப்பொழுது நான் சில நிமிடங்களில் உடல் உஷ்ணமடைந்தேன், சகோதரி கேடில் அவர்கள் வானொலியில் தூரத்தில் அத்தேசத்தை, அக்கரையிலுள்ள அத்தேசத்தை, நான் அடையும் பொழுது, நான் இயேசுவைக் காண விரும்புகிறேன். நீங்கள் விரும்பவில்லையா?" என்ற பாட்டை பாடிக்கொண்டிருந்தார்கள்.

116. நான் தரையில் நடுவில் உட்கார்ந்து, அழ ஆரம்பித்தேன். அச்சகோதரி மிக இனிமையான குரலில், பாடும் பறவையின் இனிய குரலில் (Mocking bird என்னப்படும் அமெரிக்கப் பறவை மற்ற பறவைகளின் குரலைப் பாவனை செய்து பாடக்கூடியது - மொழிபெயர்ப்பாளர்) பாடிக்கொண்டிருந்தார்கள். நான் அக்கரைத் தேசத்தில் செல்லும்பொழுது, அச்சகோதரியின் இனிய பாடலைக் கேட்க விரும்புகிறேன். "நான் இயேசுவைக் காண விரும்புகிறேன், நீர் விரும்புகிறீரா?" என்பதே அப்பாடல்.

117. "ஓ தேவனே, நான் ஒரு நாளில் அவரைக்காண விரும்புகிறேன், மலர்களெல்லாம் அருகில் மிதந்து வருகையில் நான் இயேசுவைக்

காண விரும்புகிறேன்" என்று நான் எண்ணினேன். அழகாக, பட்டொளி வீசிப்பறந்திடும் அவரை அவரது சிங்காசனத்தின்மேல் பார்ப்பது எப்படியாயிருக்கும் யோவான் நின்ற அதே இடத்தில் நானும் நிற்க விரும்புகிறேன், எனவே, நானும் அவரை நின்று நோக்கிப் பார்த்திட முடியும்.

***செய்தி:*** வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரம் #2, ஜனவரி 1, 1961, இந்தியானா, அமெரிக்கா

★★★★★

***Only believe,***
***Only believe***
***All things are possible,***
***Only believe.***


**சகோ. பினேகாஸ்**

**போன்: 8838623242,**
**9551855108**

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in